








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 17.11.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்










# இந்திய நிகழ்வுகள்

- 1943ம் ஆண்டு டிசம்பர் 30 அன்று போர்ட் பிளேரில் உள்ள செல்லுலார் சிறையில் **நேதாஜி சுபாஷ் சந்திர போஸால்** மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டதன் 75வது ஆண்டு நிறைவையொட்டி **75 ரூபாய் நாணயத்தை** வெளியிடப்போவதாக மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.
  - இந்நாணயத்தில் 'முதல் கொடியேற்ற நாள்' என தேவநாகரி எழுத்து மற்றும் ஆங்கில எழுத்து ஆகியவற்றால் பொறிக்கப்பட உள்ளது.

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது, இணையதளம் மூலமாக மிகப்பெரிய அளவில் திறந்த நிலையிலான நேரடி அல்லது ஆன்லைன் படிப்புகள் உதவியுடன் 1.5 லட்சம் உயர்கல்வி ஆசிரியர்களுக்கு இணையதளத்தில் தொழில்சார் மேம்பாட்டை அளிப்பதற்காக இரண்டு புதிய முன்முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
  1. கல்வியாளர்களுக்கான தலைமைத்துவத் திட்டம் (**LEAP – Leadership for Academicians Programme)**
  2. உயர்கல்வி ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் வருடாந்திரப் புத்துணர்ச்சியூட்டல் **(ARPIT – Annual Refresher Programme In Teaching )**
  - இதன் நோக்கம் - "எதிர்காலத்தில் தலைமைப் பொறுப்புகளை வகிக்க வாய்ப்புள்ள இரண்டாம் நிலை கல்வியியல் தலைவர்களை உருவாக்குவது ஆகும்.

- அனைத்து வகையான தொழில்களின் சிறப்பு, சேவை மற்றும் வர்த்தகம் ஆகியவற்றை தொழில் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவதற்கான, இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியின் **(IITF – India International Trade Fair) 38வது பதிப்பு புதுடெல்லியில்,** மத்திய கலாச்சாரத் துறை அமைச்சரால் தொடங்கப்பட்டுள்ளது.
  - IITF – 38ன் கருத்துரு – **"இந்தியாவில் கிராமப்புற தொழில் நிறுவனங்கள்"** என்பதாகும்.

- மட்டுவா மற்றும் நாமசூத்ரா சமூகத்திற்கான மேம்பாட்டு வாரியத்தினை அமைக்க மேற்கு வங்காள அமைச்சரவை முடிவு

செய்துள்ளது.

- இந்த வாரியங்களின் பெயர்கள், மேற்கு வங்காள நாமசூத்ரா நல வாரியம் மற்றும் மேற்கு வங்காள மட்டுவா நலவாரியம் என்பதாகும்.
- இவ்வாரியமானது, மட்டுவா மற்றும் நாமசூத்ரா சமூகங்கள் மேம்பாடு அடைய உதவுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- அமெரிக்காவின் வாசிங்டன் மாகாணத்தின், கொலம்பியா மாவட்ட **அப்பீல் நீதிமன்ற நீதிபதி** பதவிக்கு இந்திய வம்சாவளி பெண் **"நியோமி ராவ்"** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (**ICC**) ஒருநாள் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
  - ஒரு நாள் போட்டியில் சிறந்த அணிகள் பட்டியலில் **இங்கிலாந்து அணி** 126 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. **இந்தியா** 121 புள்ளிகளுடன் **இரண்டாவது** இடத்தில் உள்ளது.
  - மட்டை வீச்சாளர் தரவரிசையில் இந்திய அணி கேப்டன் **விராட் கோலி** முதலிடத்திலும், பந்து வீச்சாளர் தரவரிசையில் இந்தியாவின் **ஜஸ்ப்ரீத் பும்ரா** முதலிடத்திலும் உள்ளனர்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- நாசாவின் ரால்ப் ஆய்வுக் கருவியானது லூசி திட்டத்தின் மூலம் வியாழனின் **"ட்ரோஜன்"** என்ற குறுங்கோளுக்கு **2021ம்** ஆண்டில் பயணத்தை மேற்கொள்ள உள்ளது.
  - புளூட்டோ வரை பயணத்தை மேற்கொண்ட ரால்ப் ஆய்வுக் கருவியானது முதன் முதலில் நியூஹாரிசன் விண்கலத்தில் 2006ல் செலுத்தப்பட்டது.
  - லூசி விண்கலமானது **Ralph** - ன் ஒத்த மாதிரியான 'ட்'ரால்ப் என்ற ஆய்வுக் கருவியை சுமந்து செல்ல உள்ளது. இது வியாழனின் ட்ரோஜன் குறுங்கோளின் வேதியல் தடயங்களை

கண்டறிய உள்ளது.

## விருதுகள்

- சர்வதேச சகிப்புத் தன்மை தினமான நவம்பர் 16 அன்று, சகிப்புத் தன்மை மற்றும் அகிம்சை ஊக்குவிக்கும் வகையில், UNESCO - மதன்ஜீத் சிங் சகிப்புத் தன்மை மற்றும் அகிம்சை ஊக்குவிப்பு பரிசு (**UNESCO – Madanjeet Singh Prize**) வழங்கப்படுகிறது.
  - 2018ம் ஆண்டிக்கான **'UNESCO – Madanjeet Singh prize – 2018** இருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - **மனோன் பார்பியூ** (கனடா நாட்டை சேர்ந்த சமூகத் தொழில் முனைவோர்)
  - **The Coexist Initiative** (அரசு சாரா அமைப்பு)
- குறிப்பு
  - ஐக்கிய நாடுகள் சபை, மகாத்மா காந்தி பிறந்த 125 ஆண்டை குறிக்கும் வகையில் **1995ம்** அண்டு யுனெஸ்கோ, சகிப்புத்தன்மை அகிம்சை ஊக்குவிப்பு பரிசு என்ற பெயரில் உருவாக்கியுள்ளது.

## முக்கிய தினங்கள்

- சர்வதேச சகிப்புத் தன்மை தினம் - நவம்பர் 16 **(International Day For Tolerance)**
  - அகிம்சை மற்றும் சகிப்புத்தன்மையை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் நவம்பர் 16 அன்று சர்வதேச சகிப்பு தன்மை கடைபிடிக்கப்படுகிறது.
  - 2018ம் ஆண்டின் சர்வதேச சகிப்புத் தன்மை தின கருத்துரு: "மரியாதை பாதுகாப்பு மற்றும் அடையாளத்திற்காக அனைவரும் ஒன்றிணைவோம்" **(Together Respect safety and Dignity for All) என்பதாகும்.**


We Shine Academy TM